# பால்நிலையும் இலக்கியமும்

சர்மினி தியாகரன்*

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்பது சமூக உற்பத்தி. சமூகத்தினுடைய அடுக்கமைவுகள் அதாவது மாற்றம், வளர்ச்சி, படிநிலையாக்கம் போன்ற அனைத்து அம்சங்களும் இலக்கியத்தைப் பாதிக்கின்றது. எனினும் சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கான ஆராய்ச்சி செய்வதற்கான ஒன்றாக இலக்கியம் உள்ளது. குறிப்பாக தமிழ்ச் சமூகத்தில் இருக்கின்ற பால்நிலை வேறுபாடு இலக்கியத்தில் பதிவாகியிருக்கிறது. சமூகத்தின் பால்நிலை வேறுபாடு, பால்நிலை இடைவெளி இலக்கியத்தைப் பாதிக்கின்றது. இப்பிரதிகளை வாசிப்பதன் மூலம் அல்லது கட்டவிழ்ப்பதன் மூலம் அதில் பதிவாகியிருக்கின்ற பால்நிலை வேறுபாட்டினையும் அதனை உந்தித்தள்ளிய காரணிகளையும் விளங்கிக்கொள்ள முடியும். ஆனால் தமிழ் இலக்கியத்தை வாசிப்பதிலையோ விளங்கிக்கொள்வதிலையோ இம்முறைமை தொடர்பான ஆய்வு ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படவில்லை. அத்தகையதொரு ஆழமான முறைமையை முன்னெடுப்பதாக இக் கட்டுரை உள்ளது. ஆய்வின் முடிவாக அருந்தலான ஒருசில இலக்கியங்கள் தவிர்ந்த பெரும்பாலான கலை இலக்கியங்கள் ஆணாதிக்க கருத்துநிலைக்குச் சார்பாகவே தொழிற்பட்டு வந்திருக்கின்றன என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றைத் திரை விலக்கி பெண் உணர்வு, பெண்கருத்து என்பவற்றை முதனிலைப்படுத்தி, அவள் தன் குரலில் தன் மொழியில் பேசுவதற்கும் கருத்தாடுவதற்குமான வெளியை இலக்கியம் திறத்தல் வேண்டும். தமிழ்ச் சமூக பண்பாட்டு வாழ்நிலையில் ஆண், பெண் பால்நிலை வேறுபாடு மிகப் பெரும் இடைவெளியாகத் தொடர்ந்து வந்திருக்கின்றது என்பதனை இலக்கியங்களை முழுநிலை வாசிப்புக்குட்படுத்தும் போது புரிந்து கொள்ள முடிகின்றது. பால்நிலை சித்திரிப்புக்கள், நிலைப்படுத்தல்களை வெளிப்படுத்துவதிலும், விவாதிப்பதிலும் மறுபடைப்பாக்கம் செய்வதிலும் இலக்கியங்களுக்கு பெரும் பங்குண்டு. பால்வேறுபாடு, பால்நிலை வேறுபாடு, பால்நிலை சித்திரிப்புக்கள் போன்றவற்றை கேள்விக்கு விமர்சனத்துக்கு உள்ளாக்கி, ஆண், பெண் பால்சமத்துவத்தையும், ஆரோக்கியமான சிந்தனா சமூகத்தையும் கட்டியெழுப்புவதன் மூலம் சமூகத்தின் நீடித்த அபிவிருத்திக்கு உதவ வாய்ப்பு ஏற்படும்.

**பிரதான சொற்கள்:** இலக்கியம், பால், பாலியல், பால்நிலை, பால்நிலைவேறுபாடு, கருத்துநிலை

To whom correspondence should be addressed: sharmy.nadesan@yahoo.com

*Faculty of Graduate Studies, University of Jaffna.